# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1487/32 - 2007 මාර්තු 09 වැනි සිකුරාදා - 2007.03.09

*1487/32 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 8/80.*

**1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகாரச் சபைச் சட்டம்**

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகாரச் சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு விவசாய, நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஆகிய நான் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியின் அங்கீகாரத்துடன் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள இடப்பரப்புகளை "விசேட இடப்பரப்புகளாக" இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*மைத்திரிபால சிறிசேன,*
*விவசாய, நீர்ப்பாசன, மகாவலி அபிவிருத்தி அமைச்சர்.*

*கொழும்பு,*
*2007, மாச்சு 07.*

**அட்டவணை - 01**

***வடக்கு.***- *ஹொரவப்பத்தானை - வவுனியா வீதியின் (ஏ - 29) மத்தியிலிருந்து ஆரம்பமாகும் வவுனியா மற்றும் அனுராதபுர மாவட்டங்களின் எல்லைகள் (வட மத்திய மற்றும் வட மாகாணங்களின் மாகாண எல்லைகள்), அங்கிருந்து 1988.04.15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி அறிவித்தலின் மூலம் 06 ஆம் இலக்கக் கட்டளையின் கீழ் விசேட இடப்பரப்பென ஏற்கனவே பிரகடனப்படுத்தப்பட்டுள்ள "எல்" முறைமையின் மேற்கு எல்லையைச் சந்திக்கும் வரையான வட கிழக்கு ஓரமாகவுள்ள மாவட்ட எல்லை, அங்கிருந்து ஏற்கனவே விசேட இடப்பரப்பென வெளிப்படுத்தப்பட்டுள்ள "எல்" முறைமையின் மேற்கு எல்லையோரமாக ஏற்கனவே விசேட இடப்பரப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ள "எல்" முறைமையின் வட மற்றும் மேற்கு எல்லையைச் சந்திக்கும் இடம் தொட்டு (தென்னமரம்வாடி - அவரவியல் வீதியின் மத்திய எல்லையைச்) சந்திக்கும் இடம் வரையும் அவ்வீதியின் மத்திய எல்லை மற்றும் புல்மோட்டை நகரத்திற்கு வடக்கே அமைந்துள்ள களப்பின் வட எல்லை வரைக்கும், அங்கிருந்து புல்மோட்டைக் குடாவின் வட எல்லையோரமாக கடல் எல்லை வரைக்கும்.*

***கிழக்கு.***- *வடக்கு எல்லையின் கடைசியாகக் குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து கிழக்குக் கடல் எல்லை வழியாக தெற்கு நோக்கி யான் ஓயா ஆற்றுக் கழிமுகத்தின் மத்திய கோட்டைச் சந்திக்கும் புள்ளிவரை.*

*தெற்கு.*- கிழக்கு எல்லையின் இறுதியாகக் குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து யான் ஓயா மத்திய எல்லையைச் சந்திக்கும் இடம் வரை, அங்கிருந்து தென் - மேற்கு நோக்கி யான் ஓயாவின் மத்திய எல்லை வழியாக, அங்கிருந்து வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களைப் பிரிக்கும் எல்லையும் அது சந்திக்கும் வஹல்கட குளத்திலிருந்து வரும் யோதஎல வரைக்கும், அங்கிருந்து மேற்கு நோக்கி வஹல்கட குளத்திலிருந்து வரும் யோதஎலவின் மத்திய எல்லையும் அது சந்திக்கும், யோதஎலவின் தொடக்க இடம்வரை, அங்கிருந்து நேராக வஹல்கட குள 100 மீற்றர் உயர் பாதுகாப்பு வலயத்தின் தென், கிழக்குப் புள்ளியைச் சந்திக்கும் இடம் வரை. அங்கிருந்து கவலம்ஹல்மில்லேவ ஓயாவின் மத்திய கோட்டையும் வஹால்கடவெவயின் 100 மீற்றர் உயர் பாதுகாப்பு வலய எல்லையையும் சந்திக்கும் இடம்வரையும் அங்கிருந்து தெற்கு நோக்கி அந்த வாவியின் மத்திய கோடு வழியாக வடக்கு மேற்கு நோக்கி வெலிமுவ கிராமத்தின் புள்ளியைச் சந்திக்கும்வரையும் மேற்படி கிராம அலுவலர் பிரிவு வழியாக கெபித்திகொல்லாவை - ஹொரவப்பத்தானை பிரதேசச் செயலாளர் பிரிவின் எல்லையைச் சந்திக்கும்வரையும் அங்கிருந்து மேற்கு நோக்கி சொல்லப்பட்ட பிரதேசச் செயலாளர் பிரிவின் எல்லை வழியாக கஹற்டகஸ்திகிலிய, கெபித்திகொல்லாவை மற்றும் ஹொரவப்பத்தானை பிரதேச செயலாளர் பிரிவுகளின் மூன்று எல்லைகளைச் சந்திக்கும் புள்ளிவரையும் அங்கிருந்து மேற்கு நோக்கி கஹற்டகஸ்திகிலியவையும் கெபித்திகொல்லாவயையும் பிரிக்கும் எல்லை வழியாக கெபித்திகொல்லாவ, கஹற்டகஸ்திகிலிய மற்றும் ரம்பேவ பிரதேச செயலாளர் பிரிவுகளின் மூன்று எல்லைகளையும் சந்திக்கும் புள்ளிவரையும் ;

*மேற்கு.*- ரம்பாவை மற்றும் கெப்பித்திகொல்லாவை பிரதேச செயலாளர் பிரிவுகளின் எல்லைகளின் வழியாக வட மேற்கு நோக்கிய தெற்கு எல்லையின் இறுதியாகக் குறிப்பிடப்பட்ட இடத்திலிருந்து ரம்பாவை, கெப்பித்துகொல்லாவை மற்றும் மதவாச்சி பிரதேச செயலாளர் பிரிவுகளின் மூன்று எல்லைகளையும் சந்திக்கும் இடம் வரை, அங்கிருந்து வடமேற்கு நோக்கி மதவாச்சி மற்றும் கெப்பித்திகொல்லாவை பிரதேச செயலாளர் பிரிவுகளைப் பிரிக்கும் எல்லை வழியாக தென் எல்லையின் தொடக்கப் புள்ளியைச் சந்திக்கும் இடம் வரை.

## அட்டவணை - 02

*வடக்கு.*- வட மற்றும் வட மத்திய மாகாணங்களைப் பிரிக்கும் மாகாண எல்லையின் வவுனியா வடக்கு (தமிழ்) பிரதேச செயலாளர் பிரிவின் கிழக்கு எல்லையைச் சந்திக்கும் இடத்திலிருந்து ஆரம்பமாகி, அங்கிருந்து தற்போது விசேட இடப்பரப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ள "எல்" முறைமையின் மேற்கு எல்லையைச் சந்திக்கும் இடம் வரையான கூறப்பட்ட கிழக்கு நோக்கி மாகாண எல்லை வரை.

*கிழக்கு.*- தற்போது விசேட இடப்பரப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ள "எல்" முறைமையின் மேற்கு எல்லையோரமாக தெற்கு நோக்கி அமைந்துள்ள வட எல்லையின் இறுதியாகக் குறிப்பிடப்பட்ட இடத்திலிருந்து வட மத்திய மாகாணத்தின் மாகாண எல்லையைச் சந்திக்கும் இடம் வரை.

*மேற்கு.*- மேற்கு மற்றும் வடக்கு நோக்கிய வட மத்திய மாகாண எல்லையோரமாக கிழக்கு எல்லையின் இறுதியாகக் குறிப்பிடப்பட்ட இடத்திலிருந்து தொடக்கப் புள்ளியைச் சந்திக்கும் இடம் வரை.

## அட்டவணை - 03

*வடக்கு.*- மாங்குளம் - முல்லைத்தீவு (ஏ- 34) மற்றும் முல்லைத்தீவு - பரந்தன் (ஏ- 35) ஆகிய வீதிகளின் மத்திய எல்லைகளிலிருந்து ஆரம்பமாகி அங்கிருந்து முல்லைத்தீவு -பரந்தன் (ஏ- 35) வீதியின் மத்திய எல்லை வழியாக மேற்கு நோக்கி முல்லைத்தீவு நகரத்தின் வடக்கே அமைந்துள்ள களப்பின் தென் கரையைச் சந்திக்கும் இடம் வரையும், அங்கிருந்து கூறப்பட்ட களப்பின் தென் கரையோரமாக கிழக்குக் கடல் எல்லையைச் சந்திக்கும் இடம் வரையும்.

*கிழக்கு.*- கூறப்பட்ட கடல் எல்லையோரமாக தெற்கு நோக்கிய வட எல்லையின் இறுதியாகக் குறிப்பிடப்பட்ட இடத்திலிருந்து புல்மோட்டையின் வட எல்லையில் அமைந்துள்ள களப்பின் இடது கரையைச் சந்திக்கும் இடம் வரை.

*தெற்கு.*- கூறப்பட்ட களப்பின் வட எல்லையோரமாக மேற்கு நோக்கி கிழக்கு எல்லையின் இறுதியாகக் குறிப்பிடப்பட்ட எல்லையிலிருந்து தென்னமரம்வாடி - அவரவியல் வீதியின் மத்திய எல்லையைச் சந்திக்கும் இடம் வரை.

*மேற்கு.*- தற்போது விசேட இடப்பரப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ள "எல்" முறைமையின் கிழக்கு எல்லையோரமாக வடக்கு நோக்கிய தென் எல்லையின் இறுதியாகக் குறிப்பிடப்பட்ட இடத்திலிருந்து "எல்" முறைமையின் வடக்கு மற்றும் கிழக்கு எல்லையைச் சந்திக்கும் இடமான தண்ணி ஊத்துச் சந்தியின் மத்தி வரையும், அங்கிருந்து வடக்கு நோக்கி மாங்குளம் - முல்லைத்தீவு (ஏ-34) வீதியின் மத்திய எல்லையோரமாக தொடக்கப் புள்ளியைச் சந்திக்கும் இடம் வரை.

3- 715

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.